**ஒதுக்கீட்டுத் தலைப்பு 117 – துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 22 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 147,963,330,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 146,878,010,734 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்புக்கள் ரூபா 1,085,319,266 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 0.73 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விபரம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டு வருபவை | 200,300,000 | 197,641,045 | 1,662,666 | 0.84 |
| மூலதனம் | 144,367,230,000 | 147,765,688,955 | 1,083,656,600 | 0.73 |
| மொத்தம் | 144,567,530,000 | 147,963,330,000 | 1,085,319,266 | |

### (ஆ) பாதீட்டு முரண்

- 02 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 35,000,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

- 04 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ரூபா 97,061,798 ஆக காணப்பட்டதுடன் அது அந்த விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 50 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

11701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 5,000,000 | 4,978,234 | 3,900,000 | 6,264,664 | 27,000,000 | 24,855,832 |

11701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,694,562 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு அமைவாக அமைச்சினால் 2010 இற்கும் மேற்கொண்டும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2011 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் அந்த அறிக்கை 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 10 வாகனங்கள் அமைச்சின் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தன.

## 1.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கையேடு | | |
| நிதிப் பிரமாணம் 104 | - | அமைச்சின் 03 வாகனங்களிற்கு இடம்பெற்றிருந்த திடீர் விபத்துக் களுக்குரிய ஆரம்ப அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) திறைசேரிச் சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றுநிருபம் | - | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேடு

| | | |
|---|---|---|
| 4.1 ஆம் வழிகாட்டல் | 1,478,989 | ஒப்பந்தப் பெறுமதியிலிருந்து ஆகக் கூடியது 20 சதவீதத்திற்கு உட்பட்டு வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் செலுத்தப்பட முடியுமான போதிலும், அதற்கு முரணாக ரூபா 2,957,977 பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதியிலிருந்து 50 சதவீதத்திற்குச் சமமான வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப் பட்டிருந்தது. |

## 1.7 செயற்திட்ட அமுலாக்கலில் உள்ள குறைபாடுகள்

### (அ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

கொழும்பு – கண்டி மாற்று அதிவேகப் பாதைச் செயற்திட்டத்தின் I ஆம் கட்டத்தின் கீழ் 48.2 கிலோமீற்றர் வீதி வசதியினை வழங்குதலின் ஆரம்ப செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 284 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பிரேரிக்கப்பட் வீதியின் ஆரம்பத் திட்டமிடல் முடிவுறுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்காத காரணத்தால் இச் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் இடைநடுவே கைவிடப்பட்டிருந்ததுடன், தற்போது திட்டமிடப்பட்டு வருகின்ற வடக்கு அதிவேகப் பாதையின் தொடர்பு வீதியாக இந்த வீதி புதிய திட்டமொன்றின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**(ஆ) மகநெகும கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் - 2012 ஆம் ஆண்டு**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் படி பல ஆண்டுகளினுள் ஒரு வீதி படிப்படியாக அபிவிருத்தி செய்யப்பட்டு வரப்படுவதுடன் ஒரே வீதியின் சில பகுதிகள் ஏனைய செயற்திட்ட உதவிகளினால் (கம நெகும, சபை நிதியம்) அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. மதிப்பீட்டினைத் தயாரிக்கையில் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வீதியின் பகுதியினை உறுதியாக இனங்காணக் கூடிய விதத்தில் தேவையான விபரங்கள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாதிருந்த 5 சந்தர்ப்பங்கள் பௌதீக ரீதியில் மேற்கொள்ளப்பட்ட வீதிப் பரிசோதனைகளில் வெளிப்பட்டது.

(ii) பிரதேச சபைகளுக்கு பொறுப்பேற்கப்படாத வீதிகளும் மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து கொங்ரீட் கற்கள் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னரும் கூட அவ்வீதிகள் பிரதேச சபைகளுக்கு பொறுப்பேற்கப்படாதிருந்த காரணத்தால் அவற்றின் பராமரிப்பு வேலைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) இச்செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கம் கிராமிய வீதிகளை கொங்ரீட் செய்து அபிவிருத்தி செய்வதாக இருந்த போதிலும், வீதியின் மேற்பரப்பினை சீர்படுத்தாது பக்கவாட்டுக்கள், கழிவோடைகள், மதகுகள் மற்றும் சிறிய பாலங்கள் போன்ற கட்டமைப்புக்களை (Structures) மாத்திரம் மேம்படுத்துவதற்காக நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த 22 செயற்திட்டங்கள் காணப்பட்டன. இந்த வீதிகளின் மேற்பரப்புகள் (Surface) அபிவிருத்தி செய்யப்படாதிருந்தமையால் இச்செயற்திட்டத்தின் நோக்கம் பூரணத்துவம் அடைந்திருக்கவில்லை.

(iv) கிராமிய வீதிகளின் கட்டமைப்புக்களை (Structures) சீரமைப்பதற்காக தொழில்நுட்ப அறிவுடையோர்களின் சேவை அவசியமாக இருந்ததுடன் செயற்திட்ட ஒப்பந்தங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கமத்தொழில் சங்கங்கள் மற்றும் ஏனைய சமூக அமைப்புக்களிற்கு அத்தொழில்நுட்ப அறிவில்லாமையால் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டமைப்புக்களில் (Structures) உயர் தரத்தினை எதிர்பார்க்க முடியாதிருந்ததுடன், உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சேவை மேற்படி செயற்திட்டங்களுக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த

போதிலும், அவர்களது சேவைகளின் பொருண்மைத் தன்மையினை பரிசோதிப்பதற்கு முடியுமான விதத்தில் தொடர்புடைய விபரங்களும் அறிக்கைகளும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. பௌதீகப் பரிசோதனையில் கட்டமைப்பு நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்த 03 கமத்தொழில் சங்கங்களும் ஏனைய சமூக அமைப்புக்களும் காணப்பட்டன.

## 1.8 செயலாற்றல்

(அ) போதியளவில் அடையப்படாத நோக்கங்கள்

அமைச்சின் பிரதான பணிகளில் ஒன்றான தெற்கு அதிவேகப் பாதையின் பின்னதூவ முதல் மாத்தறை வரையான பகுதியின் நிர்மாணித்தலில் குறிப்பிடத்தக்களவு தாமதம் காணப்பட்டது. 02 ஒப்பந்தங்களில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு பின்னதூவ – கோதாகொட பகுதியிலும் கோதாகொட – கொடகம பகுதியிலும் 47.7 சதவீத மற்றும் 48 சதவீத செயன்முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அப்பகுதிகளில் பௌதீக செயன்முன்னேற்றம் 26 சதவீதமாகவும் 38 சதவீதமாகவும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) திட்டமிடல்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக செயற்பட்டிருக்காமை

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக செயற்பட்டிருக்காமை வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கையினை பரிசோதித்ததன் மூலம் தெரிய வந்தது.

பெருந்தெருக்கள் பிரிவு

(i) மட்டக்களப்பு களப்பினூடாக மன்முனைப் பாலத்தினை நிர்மாணித்தல்

2012 யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டம் 2014 மே மாதத்தில் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டது. மீளாய்வாண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 57 இலட்சத்தில் ரூபா 7 இலட்சம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் செயலாளரின் பதிலளிப்பின் படி, திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமையால் செயற்திட்டம் அமுலாக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலை

II ஆம் கட்டம் - கடுவலை முதல் கடவத்த வரையிலான பகுதி

கடுவலை முதல் கடவத்த வரையிலான 8.9 கிலோமீற்றர் நீளமான நான்கு நிரல்களுடன் கூடிய அதிவேகப் பாதையை நிர்மாணித்தல் மற்றும் கடுவலைக்கும் கடவத்தைக்கும் இடையிலான இடமாற்றல் நிலையத்தினை நிர்மாணித்தல் இதன் கீழ் திட்டமிடப்பட்டிருந்தன. 2011 நவம்பர் மாதம் ரூபா 44.88 பில்லியன் தொகைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 13.1 சதவீதமான போதிலும், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 8 சதவீதமாக காணப்பட்டது.

(iii) தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம்

இச்செயற்திட்டத்தின் கீழான குறித்த வீதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தன. இதன் கீழ் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நெடுஞ்சாலைகள் செயலகத்தை 2011 இல் பூரணப்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ரூபா 959 மில்லியன் செலவிட்டு மீளாய்வாண்டின் இறுதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த செயன்முன்னேற்றம் 82 சதவீதமாக காணப்பட்டதுடன் இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை அங்கு அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(iv) தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் (மேலதிகக் கடன்)

07 வீதிப் பகுதிகளில் புனரமைப்பு நடவடிக்கைகளை நிர்மாணித்தல் இச்செயற்திட்டத்தின் நோக்கமாக காணப்பட்டது. கடுகுருந்த – நாகொட வீதிப் பகுதியின் 2.72 கிலோமீற்றரை புனர்நிர்மாணம் செய்து மேம்படுத்துவதற்காக ரூபா 308 மில்லியன் இற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் வேலைகள் 2012 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் 45 சதவீதமான போதிலும், அடையப்பட்டிருந்த பௌதீக செயன்முன்னேற்றம் 26 ஆக காணப்பட்டது. ஏனைய வீதிப் பகுதிகளில் 59.17 கிலோமீற்றரை புனர்நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வீதிப் பகுதிகளில்

ஆண்டின் இறுதியளவில் எதிர்பார்க்கப்பட்டிருந்த பௌதீக செயன்முன்னேற்றம் வருமாறு.

| வேலைகள் | பௌதீக இலக்கு |
| --- | --- |
| | % |
| மருங்குகளை திருத்துதல் | 10 |
| நிலக் கீழ் மட்டத்தினை தயார்படுத்தல் | 05 |

(v) பேஸ்லைன் வீதி – கட்டம் III

2011 ஆம் ஆண்டில் காணிகளைக் கையேற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் கையேற்றல் செயற்பாடுகளில் 85 சதவீதத்தினை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், உள்ளபடியான செயன்முன்னேற்றம் 15 சதவீதமாகும். இது தொடர்பில் செயலாளரின் பதிலின் படி 2012 ஆம் ஆண்டினுள் ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், திறைசேரியினால் இவ்வாண்டில் கட்டுநிதி விடுவிக்கப்படாமை காரணமாக குறித்த இழப்பீட்டுத் தொகைகளை செலுத்த முடியாது போயிருந்தது.

(vi) பதுளை – கண்டி மாற்றுப் பாதை (ரஜ மாவத)

2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் 4.2 கிலோமீற்றர் கொண்ட இவ்வீதியை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் மாதமளவில் சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல் அறிக்கையினை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(vii) முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - I

இதன் கீழ் அபிவிருத்தி செய்யப்படுகின்ற வீதிகளில் பின்வரும் வீதிகளுக்காக இலக்கிடப்பட்டிருந்த செயன்முன்னேற்றம் மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே 81 மற்றும் 80 சதவீதமாக காணப்பட்டதுடன் அவற்றின் பௌதீக செயன்முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(அ) பெலவத்த – கண்கொடியாவத்த – மொரவக வீதி - 45 சதவீதம்

(ஆ) திருவானாகெடிய – அகலவத்த வீதி - 40 சதவீதம்

(viii) முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - II

இச்செயற்திட்டத்தின் கீழ் ரூபா 61,038 மில்லியன் பெறுமதி கொண்ட 25 சிவில் வேலை ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு புதிய மேம் பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் இரண்டு வீதிகளிலுள்ள பாலங்களை மீள நிர்மாணித்து விஸ்தரித்தல் என்பன அதில் உள்ளடங்கியிருந்தன. ஆண்டின் இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டங்களை அடைந்திருக்காத 15 செயற்திட்டங்கள் அவதானிக்கப்பட்டன. அந்த ஒவ்வொரு செயற்திட்டங்களும் அடைந்து கொண்டிருந்த செயன்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்திட்ட விபரம் | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டம் | பௌதீக செயன்முன்னேற்றம் |
|---|---|---|
| | % | % |
| • ஹொரவல – பெலவத்த – பிடிகல வீதி | 39 | 26 |
| • ஹொரண – அகுருவாதொட – அலுத்கம வீதி | 56 | 20 |
| • திருவானகெடிய – அகலவத்த வீதி | 55 | 15 |
| • கொரவல – பெலவத்த – பிடிகல வீதி | 100 | 28 |
| • கடஹபொல – ரம்பாவெவ வீதி | 16 | 14 |
| • குருநாகல் - நாரம்மல – மாதம்பை வீதி | 15 | 13 |
| • கலகெதர – ரம்புக்கன வீதி | 09 | 08 |
| • பாலாவி – கற்பிட்டி வீதி | 45 | 16 |
| • மஹியங்கன – திம்புலாகல – தலுக்கனே வீதி | 40 | 05 |
| • மனம்பிடிய – அரலகன்வில – மாதுருஓய வீதி | 06 | 05 |
| • ஹுங்கம – மித்தனிய வீதி | 24 | 13 |
| • தென்னேகும்புர – ரிகில்லகஸ்கட – ராகல வீதி | 18 | 17 |

| | | |
|---|---|---|
| • திஹகொட – கம்புருபிடிய மாரல – கொடபொல வீதி | 14 | 06 |
| • நுவரெலியா மாவட்டத்திலுள்ள 13 மாகாண வீதிகள் | 28 | 25 |
| • நாகொட – கலவெல்லாவ – பெல்லபிடிய வீதி | 27 | 16 |

இச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 29,325.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**துறைமுகப் பிரிவு**

(i) ஒலுவில் துறைமுக அபிவிருத்தி II ஆம் கட்டம்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2008 யூலை 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 7,790 ஆகும். 2010 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் 2012 திசெம்பர் மாதத்தில் பூரணப்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி 27 மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 6,592.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ii) மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் (II ஆம் கட்டம்)

2011 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்திட்டத்தினை 2011 ஆம் ஆண்டின் இறுதியில் பூரணப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் II ஆம் கட்டத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 808 மில்லியன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டில் ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 1.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்கான அமைச்சின் கண்காட்சிக் கூடத்தினை நிர்மாணித்தல் நடவடிக்கைக்காக மீளாய்வாண்டில் ரூபா 2,957,977

செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சிற்கு கண்காட்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தின் அளவினை தெளிவாக உறுதிப்படுத்திக் கொள்ளாது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் ரூபா 2,957,977 கூறுவிலை பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 5.4.4(1) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் செலுத்தப்படக் கூடிய வேலை ஆரம்பிப்பு முற்பணம் ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட்டிருப்பினும், அந்த எல்லையினை கருத்திற்கொள்ளாது 50 சதவீதற்குச் சமமான வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.10 இழப்புக்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதி அமைச்சரின் உத்தியோகபூர்வ விடுதியின் நீர் சிட்டைகளை உரிய காலத்தில் மீள்நிரப்பல் செய்யப்படாமை காரணமாக ரூபா 5,415 தாமதக் கட்டணம் மீளாய்வாண்டில் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சிடமுள்ள பயன்படுத்தப்படாத 02 தொலைபேசி இணைப்புக்களிற்கான வரிப் பணமாக ரூபா 17,810 மீளாய்வாண்டில் தொலைபேசிக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 1.11 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மகநெகும கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கொங்ரீட் கல் உற்பத்திக்காக இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 57 மில்லியன் 2010 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 10.8 மில்லியன் மாத்திரம் மீள அறவிடப்பட்டிருந்தது. இந்த நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 54 கொங்ரீட் கல் உற்பத்தி இயந்திரங்களில் 21 இயந்திரங்கள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.12 மனிதவள முகாமைத்துவம்

### (அ) நெடுஞ்சாலைகள் பிரிவு

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 18 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 573 | 39 | 534 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 34 | 26 | 08 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 635 | 89 | 549 | 03 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் வாகன முகாமைத்துவப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து உத்தியோகத்தர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் காணப்படுவதுடன் அப்பதவி 2011 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக உள்ளது.

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான பதவியணியினரில் 66 பேர் அமைச்சின் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(iii) மீளாய்வாண்டின் இறுதியளவில் ஆட்சேர்ப்புச் செய்யப்படாதிருந்த மொத்த ஊழிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 549 ஆகும்.

**(ஆ) துறைமுகப் பிரிவு**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 09 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 65 | 39 | 26 |
| (iv) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 36 | 21 | 15 |
| | மொத்தம் | 125 | 70 | 55 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 55 வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.